MCOP.No. 75/2019

Dated : 07.12.2023

Time: 03.45 p.m to 03.50 p.m

P.W- 1 சாட்சி மாதவன் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை .

குறுக்கு விசாரணை

**1)** விபத்தில் இறந்துபோனவர் என் தாயார். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. மற்ற மனுதாரர்கள் என் உடன் பிறந்தவர்கள். இருசக்கர வாகனம் வருவதை பார்க்காமல் சாலையை கடக்க என் தாயார் முயற்சித்ததால்தான் விபத்து நடந்தது என்றும் விபத்திற்கு அவருடைய கவனக்குறைவு தான் காரணம் என்றால் அது தவறு. மேற்படி என் தாயார் கீழே விழுந்து எண், அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து நடந்தது என்றும் அவ்வாறு தான் முதல் தகவல் அறிக்கையும் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி கார் மோதி தான் விபத்தில் என் தாயார் இறந்தார் என்றால் அது தவறு. நான் சொல்வது போன்று எடுத்துக்கொண்டாலும் இழப்பீட்டு தொகையை இருசக்கர வாகன காப்பீட்டு நிறுவனம் பாதி தொகையும் மீதிதொகைகை கார் காப்பீட்டு நிறுவனம் தரவேண்டும் என்றால் அது தவறு. மேற்படி நான் சொல்லும் கார் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அவசியமான தரப்பினர்களை சேர்க்காததாலும், அவசியமற்ற தரப்பினரை சேர்த்ததாலும் என் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு. மசாஆ.4 காப்பீடு இல்லை என் உள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Accidents Claim Tribunal, Attur.**